CCE-III-RR/PR/NSR/NSPR(B)/222/9234

B

ಆಗಸ್ಟ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ-3
AUGUST 2024 EXAMINATION-3

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12]
Total No. of Printed Pages : 12]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38]
Total No. of Questions : 38]

CCE RR/PR/ NSR/NSPR
Reduced Syllabus

Question Paper Serial No.

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T
Code No. : 85-T

ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ
Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)
(ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium)

(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)
(Regular Repeater / Private Repeater / NSR / NSPR)

ದಿನಾಂಕ : 06. 08. 2024] [Date : 06. 08. 2024
ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ] [Time : 10-15 A.M. to 1-30 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80] [Max. Marks : 80

06. 08. 2024

TEAR HERE TO OPEN THE QUESTION PAPER
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

Tear here

இங்கிருந்து பிரிக்கவும்

பொதுவான குறிப்புகள் :

Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது.** வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் (Admission Ticket) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

I. **பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :**

8 × 1 = 8

1. இந்தியாவில் நவீன கல்விக்கான அடிப்படை

   (A) சார்லஸ் வுட்டின் பரிந்துரைகள்

   (B) பீல் ஆணையத்தின் அறிக்கை

   (C) நீதித்துறை சீர்திருத்தம்

   (D) மெக்காலேயின் அறிக்கை

2. சௌரி சௌரா நிகழ்ச்சிக்கு பிறகு காந்தியடிகள் திரும்ப பெற்றுக் கொண்ட இயக்கம்

   (A) சட்ட மறுப்பு இயக்கம்

   (B) கிலாபத் இயக்கம்

   (C) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

   (D) ஒத்துழையாமை இயக்கம்

3. சர்வதேச உறவுகளை கடைபிடித்து பஞ்சசீல கொள்கைகளை ஏற்றுக்கொண்ட நாடுகள்

(A) இந்தியா - பாகிஸ்தான்

(B) இந்தியா - அமெரிக்கா

(C) இந்தியா - சீனா

(D) இந்தியா - ரஷ்யா

4. சுயஉதவிக் குழுக்களை நிறுவுவதின் நோக்கம்

(A) நகர்ப்புற வளர்ச்சி

(B) பெண்களுக்கு அதிகாரமளித்தல்

(C) தொழில்மயமாக்கல்

(D) வெளிநாட்டு வணிகத்தை ஊக்குவித்தல்

5. இந்தியாவின் உயர்ந்த பல்நோக்கு நதி பள்ளதாக்கு திட்டம் இதுவாகும்

(A) பக்ரா-நங்கல் திட்டம்

(B) கோசி திட்டம்

(C) தாமோதர் நதி பள்ளத்தாக்கு திட்டம்

(D) துங்கபத்ரா திட்டம்

6. சிவப்புகப்பிக்கல் மண் உருவாக காரணமான நிலைமைகள்

(A) நதிகள் மூலம், படிதல்

(B) பசால்ட்பாறைகளின் சிதைவு

(C) அதிக வெப்பம் மற்றும் அதிக மழைபொழிவு

(D) கரிமப் பொருட்களின் சிதைவுறுதல்

7. உலகளாவிய மனித வளர்ச்சி அறிக்கைகளை வெளியிடுவதற்கு பொறுப்பான அமைப்பு

(A) RBI (B) UNESCO

(C) UNICEF (D) UNDP

8. கிரிஷ் மாநில ஆணையத்திடம் பொருள் வாங்குவதில் ஏமாற்றப்பட்டதாக புகார் அளித்தான். அவரது கோரிக்கையின் மதிப்பு இவ்வாறாக இருக்க வேண்டும் ?

(A) ஒரு கோடிக்கு மேல்

(B) இருபது லட்சம் முதல் ஒரு கோடி வரை

(C) பத்து லட்சத்திற்கு குறைவானது

(D) பத்து லட்சம் முதல் இருபது லட்சம் வரை

II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :

8 × 1 = 8

9. முதல் ஆங்கிலேய-மராட்டிய போர் முடிவில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் எது ?

10. 1953 இல் பசல் அலி தலைமையில் ஆணையம் ஏன் உருவாக்கப்பட்டது ?

11. நெல்சன் மண்டேலா ஏன் 'ஆப்பிரிக்காவின் காந்தி' என அழைக்கப்பட்டார் ?

12. அமைதி பள்ளத்தாக்கு திட்டம் ஏன் தொடங்கப்பட்டது ?

13. சமூக படிநிலைமுறை என்றால் என்ன ?

14. தீவீர வேளாண்மையின் பயன்பாடு என்ன ?

15. பஞ்சாயத்து நிறுவனங்கள் எந்தக் கொள்கைகளின் கீழ் இயங்குகின்றன ?

16. வங்கியில் ஒரு நாளைக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் பரிமாற்றம் செய்யும் வங்கி கணக்கை பெயரிடவும் ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் : **8 × 2 = 16**

17. தீவிரவாதத்தை கட்டுப்படுத்த இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளை பட்டியலிடுக.

அல்லது

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்கள் யாவை ?

18. நாம் வேலையில்லா திண்டாட்டத்தினை எவ்வாறு தீர்க்கலாம் ?

அல்லது

முறைப்படுத்தப்படாத பிரிவு தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை ?

19. இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பது ஐரோப்பியர்களுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. ஏன் ?

20. சுதந்திரத்திற்கு பிறகு இந்தியா எதிர்க் கொண்ட சிக்கல்கள் யாவை ?

21. இந்தியாவின் தட்பவெப்பநிலை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணிகள் யாவை ?

22. மண் அரிப்பு வேளாண்மை உற்பத்தியை பெருமளவில் எவ்வாறு பாதிக்கின்றது ?

23. மனித வளர்ச்சி காட்டியை விளக்குக.

24. அரசியலமைப்பின் 73 வது சட்ட திருத்தத்தின் நோக்கங்கள் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :

9 × 3 = 27

25. பிரம்ம சமாஜத்தின் போதனைகள் யாவை ?

அல்லது

டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் பரிந்துரைத்த சீர்திருத்தங்கள் யாவை ?

26. தொலைத்தொடர்பு ஊடகங்களின் முக்கியத்துவம் என்ன ?

அல்லது

தொழிற்சாலைகளின் இட அமைப்பை தீர்மானிக்கும் காரணிகளை விவரிக்க ?

27. இந்தியாவை அதிகாரமளித்தல் செய்வதற்கு அதன் கிராமப்புற வளர்ச்சி அவசியம். ஏன் ?

அல்லது

இந்தியாவின் மனித வளர்ச்சிக்காட்டி குறைவாக உள்ளது. ஏன் ?

28. அனைவரின் வாழ்விலும் வங்கிச் செயல்பாடுகள் மிகவும் இன்றியமையாதவை. ஏன் ?

அல்லது

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, நுகர்வோரைப் பாதுகாக்கிறது. எவ்வாறு ?

29. ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஹலகலியின் வேடர்கள் நடத்திய போராட்டத்தை விவரிக்கவும்.

30. போர்ச்சுகீசியர்களிடமிருந்து கோவா எவ்வாறு விடுதலையடைந்தது ?

31. ரஷ்யா மற்றும் இந்தியாவின் இடையேயுள்ள உறவை விளக்குக.

32. தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை ?

33. வங்கக் கடலில் நேற்று இரவு கடுமையான காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டது. தமிழக அரசு அதற்கு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் ?

V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :

4 × 4 = 16

34. ஆங்கிலேயர் காலத்தில் காவல் துறையில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களை பற்றி விளக்குக.

அல்லது

முதல் இந்திய சுதந்திரப் போரின் தோல்விக்கான காரணங்களை விளக்குக.

35. இந்தியர்களிடையே தேசியவாத இயக்கத்தை தூண்டுவதில் பாலகங்காதர திலகர் முக்கிய பங்கு வகித்தார். நியாயப்படுத்துக.

36. சமீப காலமாக பெண்களின் நிலை மேம்பட்டு வருகிறது. நியாயப்படுத்தவும்.

37. காடுகளை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம் ?

VI. 38. **இந்திய தரைப் (Outline) படத்தை வரைந்து கீழ்க்காண்பவற்றைக் குறிக்கவும்.** **1 + 4 = 5**

a) ஆரவல்லி மலைத்தொடர்

b) ஹிராகுட் திட்டம்

c) இந்தியாவின் நுழைவுவாயில்

d) கோலார்

பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா : **(வினா எண் 38 க்கான மாற்று வினா)** **5**

பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டத்தின் முக்கிய நோக்கங்களை குறிப்பிடுக.

DO NOT WRITE ANYTHING HERE